16.06.2026.

O.S.No. 14/2021

DW1–இசக்கி செட்டியார் – த/பெ. சுடலையாண்டி செட்டியார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. சுடலையாண்டி செட்டியார் எனக்கு தந்தையாவார். எனது தந்தைக்கு மாடத்தி, மீனாட்சியம்மாள் என்ற 2 மனைவிகள் என்றால் சரிதான். மாடத்தியம்மாள் மூலம் 2 குழந்தைகள் சுப்பம்மாள் மற்றும் திருமலையாண்டி செட்டியார் ஆகியோர்கள்.

2. எனது தந்தை, திருமலையாண்டி செட்டியாருக்கு ¾ செண்ட் இடத்தை 09.12.1957(வா.சா.ஆ.1 ஆவணம்)மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான், வடக்குபக்கமாக ¾ செண்டும், தெற்குபக்கமாக ¾ செண்டும் எழுதிக்கொடுத்துள்ளார். எனது கணக்குப்படி எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட 5 செண்டில் 1 ½ செண்ட் திருமலையாண்டிக்கு எழுதிக்கொடுத்ததுபோக 3 ½ செண்ட் தான் இருக்கிறது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. திருமலையாண்டிக்கு ¾ செண்ட் போக 4 ¼ செண்ட் இருந்துவருகிறது என்றால் சரியல்ல. மேற்படி 4 ¼ செண்ட் இடத்தை தான் வாதிகள் வழக்கு சொத்தாக காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான்.

3. எனது தந்தையின் இறப்பிற்கு பிறகு எனது தாய் மீனாட்சியம்மாள் பெயருக்குதான் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருக்கும்போது எனதுதாய்க்கு வழக்கு

சொத்தை வாய்மொழியாக நன்கொடை கொடுத்துவிட்டதால்தான் வருவாய் ஆவணங்களில் என் தாய் பெயர் உள்ளது என்றால் நான் அதை பார்க்கவில்லை.

4. வழக்கில் சாட்சியம் அளிக்கும் காலம் வரை பிராது சொத்து சம்பந்தமான வருவாய் ஆவணங்களை பார்க்க நான் முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய் ஆவணங்கள் என் தாயின் பெயரில் இருப்பது தெரிந்தும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வாதிகள் சொல்வதுபோல் வழக்குச்சொத்தை பொதுவாக தான் உங்களோடு சேர்ந்து பொதுவாக அனுபவித்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. 2020ம் ஆண்டு முதல் எனக்கும், வாதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லை. நான் வழக்கு சொத்தை பிரித்து கொடுக்க மறுத்தால்தான் எனக்கும், வாதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல.

6. 2ம் வாதிக்கு என் செலவில்தான் திருமணம் நடைபெற்றது என்பதை பொறுத்து எனது எதிருரையிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ, எந்த வகையான வேலைகள் மற்றும் நகைகள் சம்பந்தமாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆனால் நான் தான் செய்துவைத்தேன்.

7. நான் எந்த தேதியில் எந்த வகையில் வாதிகளின் குழந்தைகளுக்கு சீர்சீராட்டுகள் செய்தேன் என்பது சம்பந்தமாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை, ஆனால் நான் தான் செய்துவைத்தேன்.

8. என் தாயை நான் தான் பராமரித்து வருகிறேன் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. நான் தொலைதொடர்பு துறையில்வேலை செய்து வந்தது சம்பந்தமாக குறித்தும், அதில் கடன் பெற்று செலவு செய்ததாக காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. நான் எனது எதிருரையில் சொல்லியுள்ளவாறு குடும்ப ஏற்பாடு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

11. ஆவணங்கள் ஏற்பட்டால்தான் சொத்தில் உரிமை ஏற்படும் என்றவிவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து சம்பந்தமாக வாதிகள் பங்கில் விடுதலை பெற்றது சம்பந்தமாக எழுத்துப்பூர்வமான ஆவணம் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

12. பொதுவாக திருமணமானால் பெண்கள் கணவர் வீட்டில் தான் வசித்துவருவார்கள் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக வம்பாக வாதிகள் மேற்படி கணவர் வீட்டில் வசித்துவருவதை காரணமாக வைத்து சொத்தில் எனக்கு விடுதலை செய்துகொடுத்தார்கள் என கட்சி செய்கிறேன்

என்றால் சரியல்ல. அவர்கள் விடுதலை எதுவும் கொடுக்கவில்லை, கூட்டாக தான் அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல.

13. நான் சொல்வதுபோல் வாதிகள் பிராது சொத்தில் பங்கை ஒருபோதும் விட்டுக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

14. வழக்குச்சொத்தில் உள்ள வீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டேன் என்றால் சரிதான்.

15. வாதிகள் விடுதலை கொடுத்ததாக சொல்லப்படும் காலத்திலிருந்து இந்நாள்வரை எனதுபெயரில் எந்த வருவாய், சொத்துவரி ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் சொத்துவரியை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பெயரில் குடிநீர் இணைப்பு உள்ளது.

16. பிராது சொத்தில் உள்ள வீட்டின் சொத்து வரி சுடலையாண்டி செட்டியார் பெயரில் தான் உள்ளது. அதை என் பெயருக்கு மாற்றுவதற்கு இதுநாள்வரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

17. வழக்கு சொத்தில் 2 ½ செண்ட் இருப்பதை நிரூபிக்க ஆணையர் நியமனம் கேட்டு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

18. வாதிகள் கூட்டுஉரிமையாளர் என்ற நிலையில் தான் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றும், அவர்கள் கோரும் பங்கை நான் கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**